முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையின்படி திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் 10 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்களின் திறப்பு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தில் பள்ளி மாணாக்கர்களுக்கு மூக்கு கண்ணாடியினை வழங்கினார். திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ, , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத் துணைச் செயலாளர் கோகுலக்கண்ணன் – வசந்தா இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சி அச்சிறுப்பாக்கம் மோனோ லட்சுமி மஹாலில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு மணமக்கள் சரத்குமார் – கண்மணி ஆகியோரை வாழ்த்தினார். சிறுவேடல் க.செல்வம் எம்.பி., பனையூர் பாபு எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் செம்பருத்தி துர்கேஷ், முன்னாள் எம்.எல்.ஏ. டாக்டர் ஆர்.டி.அரசு, அவைத் தலைவர் இனிய அரசு, மாவட்ட துணை செயலாளர் மலர்விழிகுமார், செயற்குழு உறுப்பினர்கள் நாராயணன், இரா. நாகன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, சசிகுமார், உசேன், ராஜேந்திரன், நகர செயலாளர் குமார், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகர், சாலவாக்கம் டி.குமார், கே.கண்ணன், ஜி. தம்பு, பி.எச்.சத்திய சாய், பென். சிவக்குமார், வி.ஏழுமலை, இ. சரவணன், ஏ.சிற்றரசு, எம்.எஸ்.பாபு, சேகர், குமணன்,பி.எம். குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், பேரூர் செயலாளர்கள் பாரிவள்ளல், பாண்டியன், சுந்தரமூர்த்தி, எழிலரசன், மோகன் தாஸ், பேரூராட்சி தலைவர்கள் தசரதன், சம்யுக்தா அய்யனார், மாவட்ட கவுன்சிலர்கள் குணசேகரன், மாலதி செல்வராஜ், ஜெயலட்சுமி மகேந்திரன், ராஜா ராமகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜியாவுதீன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணி, பால்ராஜ், யுவராஜ் ஆண்டோசிரில் ராஜ், ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சிவக்குமார், மீனவர் அணி அமைப்பாளர் பாரத், மாணவர் அணி துணை அமைப்பாளர் சரளா தனசேகரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா! ஏ.கே.கருணாகரன் தலைமையில்

செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் கட்டணமில்லா கண் சிகிச்சை முகாம் - மூக்குக் கண்ணாடி வழங்குதல்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கிறார்! எம்.எல்.ஏ.க்கள் இ.கருணாநிதி – எஸ்.ஆர்.ராஜா பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 25 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் "எளியோர்களின் எழுச்சி நாள்" முன்னிட்டு கட்டணமில்லா கண் சிகிச்சை முகாம் மற்றும் கட்டணமில்லா மூக்கு கண்ணாடி வழங்குதல் விழா இன்று (25.11.2025- திங்கட்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை, பெரியார் சாலை, அண்ணாநகர் குடியிருப்போர் நலச்சங்க கட்டிடத்தில் நடைபெறுகிறது.

செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ. கே.கருணாகரன் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

குறிப்பு: கட்டணமில்லா கண் சிகிச்சை முகாமில் பரிசோதனை செய்து கொண்டு மூக்கு கண்ணாடி அணியும் தேவை ஏற்படுபவர்களுக்கு, (30.11.2024 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் மூக்குக் கண்ணாடி வழங்குகிறார். மேற்படி மூக்கு கண்ணாடிகளை 37 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன் தனது மாமன்ற உறுப்பினருக்கான இரண்டு ஆண்டு சம்பளத் தொகையினை வைத்து மூக்கு கண்ணாடி பயனாளிகளுக்கு வழங்குகிறார்.

வட்டக் கழகச் செயலாளர் எஸ்.மன்னா ராஜா கண்ணன் நன்றி கூறுகிறார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உதயநாள் விழாவை முன்னிட்டு

142வது (அ) வட்டத்தில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் - மாபெரும் தெருமுனைக் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன்– ப.தாயகம்கவி – பேச்சாளர் தி.எஃபினாமேரி சிறப்புரை! முன்னிலை: எம்.கிருஷ்ணமூர்த்தி, தலைமை: வீடியோ எஸ்.எழில்!

சென்னை, நவ.25-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதி 142வது (அ) வட்ட சார்பில் வட்ட துணை செயலாளர் வீடியோ எஸ்.எழில் தலைமையில் சைதாப்பேட்டை, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, (மாரி ஓட்டல் அருகில்) 27.11.2024 புதன்கிழமை மாலை 5 மணியளவில் தமிழகத்தின் துணை முதல்வர், இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் தெருமுனை கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா. அன்பரசன், 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலையிலும், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, மாவட்ட பிரதிநிதிகள் கிண்டி செல்வம், பொன்ஜெய்சிங், பால்கார்ரவி, வட்டக் கழக நிர்வாகிகள் எம்.ஷேக்தாவூத், கே.சி.பழனிபாரதி, ஆர்.எஸ். காந்தன், பி.தேவிகா, எம். பாலாஜி, பி.வரதராஜன், எஸ். பாரதிபாஸ்கர், வே.பிரபு ஆகியோர் வரவேற்பில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக துணை அமைப்பு செயலாளரும், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினருமான ப.தாய கம்கவி, தலைமை கழக இளம் சொற்பொழிவாளர் தி.எஃபினாமேரி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.முனைவர் தமிழச்சிதங்க பாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா ஆகியோர் சிறப்புரையாற்றியுள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ். பாஸ்கரன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.அரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன்,

மாவட்ட பிரதிநிதிகள் கு. புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி. பாபு, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஏ. எஸ்.பழனி, எம்.எஸ்.பழனி. டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், கு.கார்த்திகேயன், வெ.கிஷோர்குமார், கே.தாஸ், கே.பிரபு, எம்.கார்த்திக், அ. தமீம்அன்சாரி, தீ.ராஜ்குமார், மாவுமில்ஸ்ரீதர், எம்.மாறன், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் த.மணி, ஜி.ஜே. மோசஸ், ஆர்.எஸ்.ரமேஷ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, ஆட்டோஜான், சார்புசரவணன், மாரியப்பன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசிகுமார், பூ.பாஸ்கர், ஆர். தனசேகரன், த.ஜெயராமன், எஸ்.வினோத்குமார், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம். பிரபு, இரா.வெங்கடேசன், ம. சுகுமார், க.தீபன், இரா.சத்யா,

வட்ட செயற்குழு உறுப்பினர்கள் பி.சிவகுருநாதன், திருவாரூர்தமிழ்ச்செல்வன், ரூபேஷ்குமார், அன்புசெழியன், எஸ்.செல்வம், சுரேஷ், சதிஷ், தினேஷ்ராம், விஜயகுமார், ஆர்.செல்வம் உள்ளிட்ட அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பெருதிரளாக பங்கேற்று இக்கூட்டத்தினை சிறப்பிக்க உள்ளனர்.

இறுதியாக கோயில் எஸ். மணி, ஆம்பூர்ரவி, என்.ராமு, வி.சுரேஷ் நன்றி கூறுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ. 25 –

கழக இளைஞரணி செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட கழகத்தினருக்கு மாவட்ட செயலாளர்- அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அதன் விவரம் கீழ் வருமாறு:- கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் 27.11.2024 அன்று கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய , நகர, பேரூர், கிளை, வார்டு, பகுதிகள் முழுவதும் கழக கொடியேற்றி, இனிப்புகள் , பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு, பேனா, புத்தகங்கள் , வழங்கியும் , மற்றும் முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கியும் மிக சிறப்பாக கொண்டாட வேண்டும் எனவும்,

அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற நாடாளு மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக, வார்டு கழக, செயலாளர்கள்- நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள்- துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நமது குடும்ப விழாவாக சிறப்பாக கொண்டாடவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்பு!

தி.மு.க. சட்டத்துறை மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

கழக மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமை!

கோவை, நவ. 25-

திமுக சட்டத்துறை மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட திமுக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம், திமுக சட்டத்துறை இணைச்செயலாளர் கேஎம். தண்டபாணி வரவேற்புரையாற்ற, திமுக சட்டத்துறை மூத்த வழக்கறிஞர் என்ஆர். இளங்கோ தலைமை ஏற்க, தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, மறைந்த மூத்த வழக்கறிஞர் ஏ.கே.ராஜேந்திரன் திருவுருவ படத்தை திறந்து வைத்து தலைமை உரையாற்றினார். அப்போது பேசிய அமைச்சர் ; உள்ளாட்சி தேர்தலில் ஆரம்ப கட்டம் முதல், தேர்தல் முடியும் வரை இரவு பகல் பாராமல் உழைத்த சட்டத்துறையினருக்கும், அனைத்து வழக்கறிஞர்களுக்கும் நன்றி. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் ஆரம்பத்திலிருந்தே அனைத்து பணிகளையும் பார்ப்பது வழக்கறிஞர்களே, அப்போது ஏற்படும் பிரச்சினைகள் என்றாலும் சரி, வாக்குசேகரிக்கும் போதும் என்றாலும் சரி, வாக்குசான்றை கையில் பெறும் வரை வழக்கறிஞர்களின் பணி சிறப்பானது. அதேபோல், 2026 ல் கோவையின் 10 தொகுதிகள், தமிழகம் முழுவதும் 200 தொகுதிகளையும் வெற்றெடுப்போம், என்ற பெருமையினை அடைய வேண்டும். அந்த வெற்றி பயணத்தை துவங்க வேண்டும்.

மறைந்த ஏகே ராஜேந்திரன் ஆற்றிய பணிகளை புகழாரம் சூட்டியவர், அவருக்கு வீர வணக்கத்தை செலுத்துவதாக தெரிவித்தார். மாவட்டக் கழகம் சார்பில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாக மாவட்ட செயலாளர்கள் தெரிவித்துள்ளனர். பெரும்பாலும் 80 சதவீத வழக்குகள் முடி வடைந்துள்ளது. மீதம் உள்ள வழக்குகள் விரைவில் முடிக்கப்படும் என கூறினார்.

வரும் சட்டமன்ற தேர்தல் திமுகவின் எஃகு கோட்டையாக கோவை மாற வேண்டும் அந்த அளவில் நமது பணிகள் சிறப்பாக இருக்க வேண்டும். இங்கு இருக்க கூடி வழக்கறிஞர்களுடன் இணைந்து மாவட்ட நிர்வாகம் சேர்ந்து இங்கு உள்ள 10 சட்டமன்றங்களை வென்றெடுப்போம் என்ற உறுதியை கூறிக்கொள்கி றேன் என்றார்.

தொடர்ந்து சட்டத்துறை செயலாளர் இளங்கோ பேசுகையில்;

இப்போது இருந்தே நாம் கடுமையாக உழைத்தால், திமுக 56 சதவீதத்திற்கு மேல் பெற்று விடலாம். அனைவரும் ஓரணியில் இருந்து பணியாற்ற வேண்டும். பி.எல்.ஏ. 2 வில் இருக்கின்ற புரிதல், நடைமுறைகளை தெளிவுபடுத்த வேண்டும். தொகுதி பார்வையாளர்கள் அறிவிக்கப்பட்டு , வெவ்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பபடுவார்கள். அதற்கு வழக்கறிஞர்கள் தயாராக இருக்க வேண்டும். ஒரு காவல்நிலையத்திற்கு 5 லிருந்து 7 வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட உள்ளனர். தேர்தல் பணிபுரியும் வழக்கறிஞர்கள் பட்டியலை தயார் செய்து வரும் ஜனவரிக்குள் தலைமைக்கு அனுப்ப வேண்டும்.

வாக்குபதிவு எந்திரத்தை தொடர்ச்சியாக கண்காணிப்பது திமுக வழக்கறிஞர் அணி மட்டும் தான். வாக்குப்பதிவு எந்திரத்தின் புரிதலை நாம் அதிகப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும். கழக வழக்கறிஞர்கள் இப்போதே தேர்தல் கமிஷனின் விதிகளை தெரிந்து கொள்ளுங்கள் . அமைச்சர் செந்தில்பாலாஜி கோவையின் 10 தொகுதிகளையும் வெற்றி பெற்று தலைவரிடம் ஒப்பபடைப்பார். என்ற நம்பிக்கை உள்ளது என கூறினார்.

இந்த நிகழ்வில், தலைமை கழக வழக்கறிஞர் சரவணன், சட்டத்துறை இணைச் செயலாளர் அருள்மொழி, திமுக மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக் Ex Mla, தொஅ.ரவி, தளபதி முருகேசன், மற்றும் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

106 (அ) வட்டக் கழக பொருளாளர்

கோ. கபாலி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, நவ.25-

106வது (அ) வட்ட கழக முன்னாள் பொருளாளர் கோ.கபாலி நேற்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

106 'அ' வட்டக் கழகச் செயலாளர் இரா.நவீந்திரகுமார் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் 24.11.2024 கலை 9.00 மணி அளவில் அரும்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெருப்புமேடு து. முத்து
நவம்பர் 25 (2015)

இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சைதை பகுதியில் வட்ட அவைத்தலைவர், துணைச் செயலாளராக தொடர்ந்து பொறுப்பில் இருந்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், குடிநீர் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 58 நாட்கள் தலைவர் கலைஞர் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சமயநல்லூர் செல்வராஜ்
நவம்பர் 25 (2012)

சமயநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தவர்.

"இளமைக் காலத்திலேயே, மாணவப் பருவத்திலே ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே சுயமரியாதை வீரராகத் திகழ்ந்தவர். அவர் முடிவெய்துகிற வரையில் முனை முறியாமல்; திராவிட இயக்கச் சிந்தனையாளராக சுயமரியாதைச் சுடராகத் திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.